## 9. தலைப்பு 7 – நீதிச் சேவைகள் ஆணைக்குழு

---

### 9.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

---

ஆணைக்குழுவினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | கணக்காய்வு ஐயவினாப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 452(1) |
| (ஈ) | சில்லறைக் காசேடு | நிதிப்பிரமாணம் 446 |
| (உ) | பொறுப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (ஊ) | அடியிதழ்சேர் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 |
| (எ) | வாகன நிரல்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |

### 9.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**பாதீட்டு முரண்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 450,000 மொத்த தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மூன்று செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய

நிதியேற்பாட்டில் 17 சதவீதம் முதல் 21 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 9.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 9.3.1 உள்ளகக் கணக்காய்வு

ஆணைக்குழுவிற்காக உள்ளகக் கணக்காய்வுக் கூறு ஒன்று தாபிக்கப்பட்டிருக்க வில்லை.

### 9.3.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

ஆணைக்குழுவிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 9.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

ஆணைக்குழுவின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

ஆணைக்குழுவிற்குரிய மோட்டார் வாகனமொன்று ஏறக்குறைய ஒரு வருடமாகப் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவின் அலுவலகத்தினால் 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய சிபாரிசுகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 9.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 09 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 54 | 31 | 23 |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 16 | 08 |
| | மொத்தம் | 93 | 57 | 36 |